# சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு
# எச்சிலில் மின்னிய ராம நாமம்

---

ராம் லால் வீட்டில் எப்போதும் ஒரே ரகளை-அடிதடி-ஆர்ப்பாட்டம்-சண்டை தான். கல்யாணம் ஆன நாள் முதல் இன்று வரை தம்பதியினருக்குள் ஒற்றுமையே இல்லை. இதனால் அவர்கள் ஜீவாதார சக்தி SAL ENERGY முற்றிலும் போய்விட்டது. அதிலும் காதில் விழக்கூடாத அல்ப-கெட்ட வார்த்தைகளைக் கேட்டால் மஹாலக்ஷ்மி வீட்டில் தங்குவாளா?

ராம் லால் மிகவும் சோம்பேறி! தன் உணவைக் கூட அவன் கையால் எடுத்துச் சாப்பிட யோசிப்பான். அவனுக்குக் கல்யாணம் வேறு செய்து வைத்து விட்டனர். பணம் இல்லாமல் அன்றாடம் வாழ முடியுமா? இதில் வேறு அவனுக்கு மூன்று குழந்தைகள்!

மனைவியோ குழந்தைகளைக் காப்பாற்ற வீட்டு வேலை செய்கிறாள். இவனோ வயிறு முட்ட உண்டுவிட்டு ஊர்ச் சத்திரத்தில் சென்று தாயம் விளையாடுவான், தூங்குவான். மாலை வேளை உள்ளூர் பாண்டுரங்கன் சன்னிதியில் பஜனைக்கு மட்டும் ஆஜர் ஆகிவிடுவது அவனுக்குள் இருந்த பூர்வ ஜென்மத் தொடர்பால் உண்டான நற்பழக்கம்.

எதற்கு கோயிலுக்குப் போகிறான்? அதையும் கேளுங்கள்! பஜனைப் பாடல்கள் சுகம் தருவதை அவன் மனம் விரும்பியது, அதிலும் உச்சஸ்தானத்தில் நாம சங்கீர்த்தனம் செய்யும் போது அவனுக்கு எழுந்து பாகவதர்களுடன் ஆடவும் பிடித்துப் போனது. அதை விட பஜனை முடிந்ததும் கிடைக்கும் விதவிதமான ப்ரசாதங்கள் அவனுக்கு மிகவும் இஷ்டமாயின.

காலம் ஓடியது.ஒரு நாள் பண்டரிபுரம் நோக்கிச் சென்ற பக்தர் கூட்டம் ஒன்றினைக் கண்டான் ராம் லால். அவர்கள் சமர்த்த ராமதாசரின் உயர்ந்த பக்தியையும் மக்களுக்கு அவர் செய்யும் சேவைகளையும் பாண்டுரங்கன் மீது அவர் பாடும் மராட்டிய அபங்கப் பாடல்களையும் புகழ்ந்து பேசினர்.

மேலும் அவரது ஆஸ்ரமத்தில் பக்தர்கள் அவரது சிஷ்யர்கள் எப்போதும் எதற்கும் கவலை இன்றி சுகமாக அவர் அருகில் வாழ்வாதவும் அவன் காதில் விழ அவன் மனம் எதையோ திட்டம் போட்டது. விடிய விடிய யோசித்தான்.

"இந்த வாழ்க்கையில் என்ன இருக்கிறது? எப்போதும் ஒரே சண்டை! சச்சரவு! "காசு காசு" என்று பேயாய் மனைவி உழைக்கச் சொல்கிறாள். அது எனக்கு முடியாது! பேசாமல் வீட்டைத் துறந்து ராமதாசரிடம் போய் சரணாகதி செய்து கொண்டு அவர் ஆஸ்ரமத்திலேயே இருந்து விட்டால் மூன்று வேளையும் சாப்பாடு, பஜனை சுகம் என வாழ்ந்து முடிக்கலாமே!" என்று குருட்டுத் தனமான முடிவில் வீட்டை விட்டு இரவோடு இரவாக ராம் லால் சமர்த்த ராமதாசரின் ஆஸ்ரமம் சென்று விட்டான்.

குருநாதருக்கு இவனது மனம் தெரியாமலா இருக்கும்? இப்படிப் பட்ட மூடர்களைத் திருத்துவதற்காகத் தானே குருமார்கள் இருக்கிறார்கள்? அவன் ஆசைப்படி ராமதாசரும் அவனுக்கு மந்த்ர தீக்ஷை செய்து சன்யாசி ஆக்கினார். சற்று நேரத்தில், ஆஸ்ரம வாசிகள் பிக்ஷை ஓட்டை எடுத்துக் கொண்டு ஊருக்குள் சென்றனர்.

"என்ன பிக்ஷை எடுக்கிறார்கள்? எவ்வளவு பெரிய குரு? ஆஸ்ரமத்தில் சமையல் இல்லையா? ஐயோ மோசம் போனாமா?" என்று மனதில் புலம்பினான் ராம் லால். அவனும் கையில் ஓட்டை ஏந்தி வீடு வீடாக ஏறி பிக்ஷை கேட்டான்.

பிக்ஷை முடிந்து திரும்பிய அவன் பூஜைகள் முடிந்ததும் சாப்பிடத் தொடங்கினான். அடடே! பிக்ஷை உணவுகளில் உப்பே இல்லையே! ஐயோ எப்படி இவற்றை உண்பது? வீட்டில் மனைவி வைக்கும் கஞ்சி பரவாயில்லையே!

அவன் மனநிலை புரிந்த ராமதாசர், "ராம்! நாம் சன்யாசிகள் அல்லவா? நாக்குச் சுவைக்கு அடிமை ஆகிவிட்டால் பின் அனைத்துப் புலன் இச்சைகளுக்கும் அடிமை ஆகி விடுவோம். எனவே நம் ஆஸ்ரம வாசிகள் பிக்ஷைக்கு உப்பிடாத உணவைத் தருமாறு இவ்வூர் ஜனங்களுக்கு அறிவுரை செய்து விட்டேன்!" என்று விளக்கம் அளித்தார்.

ராம் லாலுக்குத் தலையே சுத்தியது. ஒரு நாள் கூட ஆகவில்லை, சன்யாசம் வெறுத்தது, பொறுத்துக் கொண்டான்.அடுத்த நாள் வீரசிவாஜி மஹாராஜா ராமதாசரை தரிசிக்க வரும் செய்தியை ஆஸ்ரம வாசிகள் பேசிக்கொண்டனர். அப்போது செய்யப்படும் பஜனையைக் கேட்கவே எண்ணற்ற மக்கள் கூட ஆரம்பித்தனர். அன்று விதவிதமான உணவு வகைகள் கிடைக்கும் என்றும் ராம்லாலின் காதுகளில் இனிப்பாய் விழுந்தது.

வீர சிவாஜியும் மிக்க மரியாதையுடன் வந்து குருவுடன் ஆன்மீக விஷயம் பேசினார், பஜனையும் இனிதே நடந்தது. ப்ரசாதங்கள் வந்தன.,அனைத்தும் விதவிதமான இனிப்பு வகைகள்.ராம் லாலுக்கோ வாயில் தேன் ஊறியது.

”என் இனிய மாணவர்களே! ப்ரசாத இனிப்புகளை நாம் தவிர்க்கிறோம் அல்லவா? ஏன் என்றால் உடலில் விரைவில் கேடு வரும். ஆன்மீக வாழ்க்கை வ்யாதியால் தடைபடும், எனவே துளசி தீர்த்தமும் கூழையும் உட்கொண்டு விடுங்கள், அனைத்து இனிப்புகளையும் பக்தர்களுக்கே தானம் செய்யுங்கள்!” என்று ராமதாசர் கூறியதும் ராம் லாலுக்கு மனதில் சொல்ல முடியாத வெறுப்பும் கோபமும் ஏற்பட்டது. தான் தவறான இடத்துக்கு வந்து விட்டோம் என எண்ணினான்.இனிமேல் இங்கு வாழ்வது கடினம் என்று முடிவு செய்து மறுநாள் காலையில் ராமதாசர் முன் வந்து,

”ஸ்வாமி! என்னை மன்னிக்கவும்! வீட்டின் ப்ரச்சனைகளை மறக்க ஒதுக்க உங்கள் ஆஸ்ரமத்தில் சேர்ந்து, இங்கே சுகமாக உண்டு உறங்கி வாழலாம் என்று தவறாக எண்ணி விட்டேன்! என்னால் இனி இங்கே வாழ முடியாது, இதற்கு என் வீடே மேல், என் மந்த்ர தீக்ஷையை மீண்டும் உங்களுக்கே அர்ப்பணித்து விடுகிறேன்! எனக்குப் போக உத்தரவு தாருங்கள்!” என்றான் மனதில் வருத்தம் கலந்த வெறுப்புடன்.

இதை உணராதவரா ராமதாசர்? ”வா அப்பனே! நல்லது செய்தாய்! இதோ இந்த கல் மீது எச்சிலைத் துப்பு! அதன் மூலம் உன் மந்த்ர சக்தி என்னிடம் சேரும்!” என்று கூற அவனும் காரித்துப்ப, கல் மீது விழுந்த எச்சில் மீது சூரிய ஒளி பட; அதில் ”ஸ்ரீராம்” என்று மின்னியது! அனைவரும் அதிசயிக்க, ராம் லாலுக்கோ ஏதும் புரியவில்லை!

”ராம் லால்! உழைக்காமல் வாழ முடியுமா? சாப்பிட ஆசைப்பட்டாலும் கையால் எடுத்து வாய்க்குள் உணவைப் போடும் வேலையைச் செய்ய வேண்டுமே? உலகில் ஒவ்வொரு அணுவும் இயங்கிய படியே இருக்கிறதே!

வீட்டை விட்டு சன்யாசம் வருவது சம்சார வாழ்க்கையில் இருந்து தப்பிக்க அல்ல! ஆன்மீகத்தில் முழுக்க முழுக்க ஈடுபட! உன்னைப் போன்ற பலர் இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வீடோ ஆஸ்ரமமோ, காடோ நாடோ எங்கும் எதிலும் இன்ப-துன்பங்கள் உண்டு. ஏதோ பூர்வ ஜென்ம புண்ணியத்தால் அன்றாடம் நீ சற்று மெய்மறந்து

பஜனையில் லயித்த புண்ணியம், என்னிடம் வந்தால் அமைதி உண்டு என்று கண்மூடித்தனத்தாலும் நம்பிய குரு விஸ்வாசம் உன் எச்சிலில் ஸ்ரீராம மந்த்ரத்தைக் காட்டுகிறது!

உன் சக்தியை இப்போதாவது நீ உணர வேண்டும்.என் ஆசீர்வாதம் என்றென்றுமே உனக்கு உண்டு!" என்று சத்குரு விளக்கினார்.

மனதில் அறிவு உதயம் ஆன ஞான சூரியன் ஆனான் ராம் லால்.
"குருவே! என் மூடத்தனத்தை நீக்கினீர்! எனக்கு என் தாமச குணம் போக்கும் மருந்தாய் ஸ்ரீராம நாமத்தை அளித்தும் விட்டீர். இனி நான் என் வீட்டுக்கே போகிறேன். உழைத்து என் குடும்பத்தைக் காக்கிறேன். மீண்டும் உங்களை சந்திக்கிறேன்!" என்று நமஸ்காரம் செய்து ஊர் திரும்பினான் ராம் லால்.

சதா ராம நாமம் ஜெபித்து மிக்க விழிப்புணர்வு கொண்டு கூலி வேலைகளை மேற்கொண்டான். அவனது உழைப்பைக் கண்ட அவன் மனைவி மகிழ்ந்தாள், அவனை மதித்தாள். அவனது ஆன்மீக வாழ்க்கையில் தன்னையும் தன் பிள்ளைகளையும் பிணைத்துக் கொண்டாள். எளிமையாகவும் ஆன்மீகத்தில் அதிசெல்வனாகவும் ராம் லால் வாழ்ந்து ஒரு கட்டத்தில் தன் குடும்பத்துடன் தன் குருநாதர் இருக்கும் ஊருக்கே சென்று வாழ்ந்து அவருக்கும் மக்களுக்கும் சேவை செய்தான். ராமதாசரின் அபங்கப் பாடல்களை ஊர் ஊராய்ச் சென்று பரப்பினான்! அவன் வாழ்க்கையும் பூர்ண மகிழ்ச்சியைக் கொண்டாடியது!

ஹரி ஓம்!
ஹரி சரணம்!